பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 31 | செவ்வாய்க்கிழமை | 17.10.2023 | அதிர்வு 77

## வல்வெட்டித்துறையில் ஆணொருவரின் சடலம்

– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், வடமராட்சி – வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடிப் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த இராமநாதன் தங்கநாதன் (வயது – 63) 02

# கிளிநொச்சியில் 17 வயது மாணவிகள் இருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்பு

## தற்கொலையா? கொலையா? பொலிஸார் தீவிர விசாரணை

– கிளிநொச்சி நிருபர் –

கிளிநொச்சியில் 17 வயதான மாணவிகள் இருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

"எங்கள் சாவுக்கு யாரும் காரணமல்ல, இது நாங்கள் எடுத்த முடிவு. எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை" – என்று எழுதி வைக்கப்பட்ட கடிதம் ஒன்றும் அவர்களின் சடலங்களுக்கு அருகில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

நண்பிகளான லோகேஸ்வரன் தமிழினி, சுரேஷ்குமார் தணிகை ஆகிய இரண்டு மாணவிகளும் கிளிநொச்சி, பெரியபரந்தன் பகுதியில் உள்ள லோகேஸ்வரன் தமிழினியின் வீட்டுச் சமையலறையில் 02

# தேர்தலில் மொட்டுவுக்குத் தானே தலைமை என்கின்றார் மஹிந்தர்

## இரு பிரதான கட்சிகளுக்கிடையே போட்டி நிலவும் என்றும் தெரிவிப்பு



"அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் இடம்பெறும். எனது தலைமைத்துவத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்வரும் தேசிய தேர்தல்களில் போட்டியிடும். இந்தத் தேர்தல்க ளில் இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையே போட்டி நிலவும்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 02

# பலஸ்தீன மக்கள் பக்கமே நாங்களும் நிற்கின்றோம்



## தூதுவருடனான சந்திப்பில் சஜித் உறுதி

பலஸ்தீன மக்களின் விடியலுக்காக இலங்கை மக்களோடு தாமும் என்றும் முன்நிற்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள பலஸ்தீன தூதரகத்தில் தூதுவர் கலாநிதி ஸுஹைர் எம்.எச்.டார் செயிட்டை நேற்று சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகின் கடைசி ஆக்கிரமிப்பு நாடான பலஸ்தீன தேசத்தினதும் மக்களினதும் விடியலுக்கான தீர்வாக ஐக்கிய நாடுகள் சபை இறுதியாக நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், 02

# இளம் குடும்பப் பெண் நேற்று சுட்டுக்கொலை

## கணவன் தலைமறைவு

இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அனுராதபுரம், கெக்கிராவை பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

25 வயதுடைய தாரகி குணரட்ன அமரசேன என்ற பெண்ணே அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலைச் 06




அடுத்த ஆண்டு நடைபெறக் கூடிய ஜனாதிபதித் தேர்தல் குறித்து தென்னிலங்கை ஊடகவியலாளர் ஒருவர் சுட்டிக்காட்டி இருக்கும் விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

அரசியலில் தங்களின் பதவிக்குரிய காலங்கள் கடந்த பின்னரும், அரசியலில் ஒட்டிக் கொண்டிருக்கும் நான்கு 'பழசுகளை' அவர் வரிசைப்படுத்துகின்றார்.

அடுத்த வருடம் ஜனாதிபதி 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் நடக்கும் போது மஹிந்தவுக்கு 78 வயது. ரணிலுக்கு 75 வயது. மைத்திரிக்கு 73 வயது. சந்திரிகாவுக்கு 79 வயது.

வயதாகியும் அரசியலைக் கட்டிப் பிடித்து நிற்கும் இந்த நால்வருக்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தல் 'பென்ஷன்' கொடுத்து நிரந்தரமாக வீட்டுக்குக் கட்டாயப்படுத்தி அனுப்பி வைக்கும் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

இந்தத் தேர்தலில் தாங்கள் போட்டியிடப் போகின்றார்கள் என்று தென்னிலங்கையில் மூவர் அறிவித்திருக்கின்றார்கள். ஒருவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ. மற்றவர் தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பியின்) தலைவர் அநுரகுமார திஸநாயக்க. அடுத்தவர் கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்க பெரேரா.

இந்த மூவரிடையேயும் ஓர் ஒற்றுமை இருக்கின்றது. மூவரும் 1967 இல் பிறந்தவர்கள். அடுத்த ஆண்டு தேர்தல் நடக்கும்போது அவர்களின் வயது 56 அல்லது 57தான்.

1977 முதல் 47 ஆண்டுகளாக அரசியல் செய்யும் மஹிந்த, மைத்திரி, ரணில் மூவருக்கும் மட்டுமல்லாமல், எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்து கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் அரசியல் செய்யும் சந்திரிக்காவுக்கும் அரசியலில் விடை கொடுக்கும் நிகழ்வாக அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் அமையும் என்பது அந்த சிரேஷ்ட பத்திரிகையாளரின் கணிப்பீடு. பொறுத்திருந்து பார்ப்போமே...!

\+ \+ \+

கிறிஸ்தவ திருச்சபையின் தலைமையிடமான வத்திக்கானில் திருத்தந்தை பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெறும் முக்கிய கலந்தாய்வுக் கருத்தரங்கு ஒன்றில் பங்குபற்றுவதற்காக கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் உட்பட இலங்கையின் ஆயர்கள் அனைவரும் இவ்வாரம் வத்திக்கானுக்குப் புறப்படுகின்றார்கள் என்று கொழும்பில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டின் ஆயர்களும் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து, திருத்தந்தையுடன் தனியாகச் சந்தித்துப் பேச அப்போது வாய்ப்பளிக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

இலங்கை ஆயர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் போது, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விசாரணைகள் மற்றும் தற்போதைய நிலைவரம் குறித்து திருத்தந்தைக்கு விளக்குவதற்கு இலங்கை ஆயர்கள் திட்டமிட்டு வருகின்றனர் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கையில் தமிழர்களின் அவலநிலை குறித்து வடக்கு - கிழக்கு ஆயர்கள் திருத்தந்தைக்கு விளக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்குமா? தெரியவில்லை.

## பலஸ்தீன மக்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச சட்டங்கள்,சர்வதேச சமவாயங்கள், மனித உரிமை பிரகடனங்களை நடைமுறைப்படுத்த சர்வதேசம் அர்ப்பணிப்புடன் தலையிட வேண்டும் என்றும், இவ்விவகாரத்தில் சில நாடுகளின் ஒரு தலைபட்ச போக்குக்கு இடமளிக்க முடியாது என்றும், அமைதி, ஒற்றுமையை நிலைநாட்ட சர்வதேசம் கூடிய கரிசனையோடு செயற்பட உலகத் தலைவர்கள் முன்வர வேண்டும் என்றும் தூதுவருடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பலஸ்தீன மக்களுடன் ஒட்டுமொத்த இலங்கை மக்களும் ஒன்றுபட்டு நிற்பார்கள் என்றும், ஜனநாயக ரீதியிலான தீர்விலேயே விடியலை எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சு மேசைக்கு வந்து சகோதரத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும், ஒற்றுமையுடனும் இப்பிரச்சினையைத் தீர்க்க உலகத் தலைவர்கள் வரலாற்றை ஆய்ந்து சரியான நிலைப்பாட்டை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் இங்கு எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

1948 அரபு-இஸ்ரேல் போர் மற்றும் அதைத் தொடர்ந்த மோதல்களுக்குப் பிறகு அதிலிருந்து இன்று வரை பலஸ்தீன மக்களின் ஜனநாயக உரிமைகள் அங்கீகரிக்கப்படவில்லை என்ற விடயத்தின் அடிப்படையில் மோதல்கள் துரதிஷ்டவசமாக விரிவடைந்து சென்றாலும், இஸ்ரேலுக்கு மாத்திரமன்றி அதிகாரம் படைத்த இஸ்ரேல் சார்பு குழுக்களுக்கும், அந்தச் சிந்தனை முகாமுக்கும் பலத்த அடியை ஹமாஸ் போராளிகளின் தாக்குதல் காண்பிப்பதாகவும், அம்முகாம் கண்ட பலத்த தோல்வியுமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பலஸ்தீனில் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே தமதும் ஐக்கிய மக்கள் சக்தியினதும் நிலைப்பாடாகும் என்றும், நாங்கள் அமைதியை



விரும்புகின்றோம் என்பதுடன் பலஸ்தீனியர்களுக்கு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டும் என்றும், அவர்களின் தேசியம், அரச நிர்வாகம் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும், இது சர்வதேச அளவில் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகும் என்றும், பன்முக பார்வையில் பலஸ்தீன சுதந்திர தேசத்துக்குச் சர்வதேசம் தற்போதேனும் ஒன்றுபடாவிட்டால் மனிதாபினம் தோல்வியட்டதாகவே அர்த்தப்படும் என்றும், மனிதாபின தோல்விக்கு இதை விட முன்னுதாரனம் வேறில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை உங்களுடன் இருக்கின்றது என்பதை பலஸ்தீன மக்களுக்கு மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகின்றேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்காரும் கலந்து கொண்டார்.

## கிளிநொச்சியில் 17 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று பிற்பகல் 2 மணியளவில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் இறுதியாக நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றிவிட்டு பெறுபேறுக்காகக் காத்திருந்த மாணவிகளாவர்.

சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சி பொலிஸார் சடலங்களை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இது தற்கொலையா? கொலையா? போன்ற கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வல்வெட்டித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

என்பவரே நேற்றுக் காலை இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டில் இரவு படுக்கையில் இருந்து அவரைக் காலையில் காணாத நிலையில் தேடியபோது வீட்டின் பின்புறம் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணை மேற்கொண்டார்.

சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்து பிரதே பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்கு மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டார்.

## தேர்தலில் மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இஸ்ரேல் - பலஸ்தீனம் மோதல் தொடர்பில் கொழும்பில் உள்ள பலஸ்தீனத்துக்கான தூதுவரை நேற்று நேரில் சந்தித்து பேச்சில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி:- ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றதே?

பதில்:- அரசமைப்பின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் இடம்பெறும்.

கேள்வி:- புதிய அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளமை பற்றி உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்:- தேர்தல் ஒன்று இடம்பெறும் காலத்தில் புதிதாக அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுவது இயல்பானதே. ஆனால், தேர்தலில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கு இடையில்தான் போட்டி இருக்கும்.

கேள்வி:- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்குத் தயாரா ?

பதில்:- நாங்கள் தேர்தலுக்கு என்றும் தயாராகவுள்ளோம். வெகுவிரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதற்கான நகர்வுகளைத் தற்போது முன்னெடுத்துள்ளோம்.

கேள்வி:- எவரது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன தேர்தலில் போட்டியிடும்?

பதில்:- எனது தலைமைத்துவத்துடன் பொதுஜன பெரமுன பலமான முறையில் எதிர்வரும் தேசிய தேர்தல்களில் போட்டியிடும்.

கேள்வி:- பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு இல்லை என்று மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுகின்றனரே?

பதில்:- மக்கள் விடுதலை முன்னணியினர் குற்றஞ்சாட்டுவது ஒன்றும் புதிய விடயமல்ல. அவர்களின் குற்றச்சாட்டுக்கு முரணாகவே வாக்குகள் காணப்படுகின்றன. ஆகவே, அவர்களின் குற்றச்சாட்டுக்கள் குறித்து அவதானம் செலுத்த வேண்டிய தேவையில்லை.

## சமூக ஊடகங்கள் மூலம் இடம்பெறும்

# அவதூறு – பழிவாங்கலைத் தடுக்க கண்காணிப்பு முறைமை அவசியம்

## வஜிர எம்.பி. வலியுறுத்து



சிங்கப்பூரின் தகவல் மற்றும் தொடர்பு ஊடக அதிகார சபைச் சட்டம் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமைந்ததைப் போன்று உண்மையான தகவல்களை அறிந்து கொள்ளும் பிரஜைகளின் உரிமையை உறுதிப்படுத்தி இலங்கையை உலகின் தலைசிறந்த நிலைக்கு உயர்த்த தற்போதைய அரசு செயற்பட்டு வருகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்

சகலருக்கும் சமூக ஊடக சுதந்திரம் இருந்தாலும், பிறரை அவமதிக்கும் நோக்கில் அல்லது பழிவாங்கும் நோக்கில் பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில் விதிகள் கொண்டு வரப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவின் நியமனத்தின் ஊடாக, ஆய்வு ரீதியிலான ஊடகவியலாளரும் அதேபோன்று ஆராய்ந்து பார்க்கக்கூடிய பிரஜையும் உருவாக்கப்படுவர்.

இணையத்தளத்தின் ஊடாக அவதூறான மற்றும் பொய்யான தகவல்களை வழங்குபவர்கள் நீதித்துறை மூலமே தண்டிக்கப்படும் அதேவேளை, ஆணைக்குழுவுக்கு தண்டனை வழங்கும் உரிமையும் இல்லை.

உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர். ஆனால், இறுதியில் மக்களை தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை ஒரு வருந்தத்தக்க விடயமாகும். எனவே, இந்த சமூக ஊடகங்களை உருவாக்கியவர்களே அதற்கான விதிகளை கொண்டு வந்தனர்.

தற்போது இலங்கையிலும் சமூக ஊடகக்கண்காணிப்பின் அவசியம் குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகிறது.

தற்போது இலங்கையில் அனைத்துத் தொலைக்காட்சி அலைவரிசைகளும் தொலைக்காட்சிச் சட்டத்தால் மாத்திரமே கட்டுப்படுத்தப்படுகின்றன. அது எவ்வகையிலும் நியாயமான ஊடக வளர்ச்சிக்கு பொருத்தமற்றது.

அவ்வாறென்றால், உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் தகவல் தொடர்பாடலை அல்லது ஊடகங்களை ஒழுங்குபடுத்தவும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவும், சட்ட விதி முறைகளை தயாரித்துள்ளன.

உதாரணமாக, சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

உதாரணமாகக் கூறினால், குறிப்பாக இன்றைய இளம் தலைமுறையினர் **Facebook, Twitter, Tiktok, Instagram** மற்றும் வுழுரவரடிந போன்ற சமூக ஊடகங்கள் மூலம் வழங்கப்படும் செய்திகள் குறித்து மிகவும் சங்கடமான சூழ்நிலையில் உள்ளனர். இளைஞர்கள் வாழ்நாளில் மிகவும் பெறுமதியான அழகிய காதல் கதைக்கும் பெரும் தடைகள் ஏற்பட்டுள்ள நிலையில் அது, அவர்களை தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்குச் சென்றிருக்கும் இவ்வகையான சமூக ஊடக வலையமைப்பு மூலம் இடம்பெறுகின்றமையினால் அவர்களும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகி உள்ளதுடன் இதற்கு, சட்ட விதிகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகள் தேவை என்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

உலகில் உள்ள **Facebook** உள்ளிட்ட ஏனைய தகவல் பரிமாற்றத் தளங்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பதைக் கட்டுப்படுத்தல், சரியான தகவல்களை சிறந்த முறையில் மக்களுக்கு வழங்குவது மற்றும் தவறான தகவல்களை வழங்குபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமல்படுத்துவதல் ஆகியவை கற்ற மற்றும் முன்னேறி வரும் ஒரு சமூகத்துக்கு மிக முக்கியமான விடயம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அப்படியானால், ஆசியாவிலும், உலகிலும் இலங்கை வலுப்பெற்று நிற்க, ஊடகங்களின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும். இலங்கையிலுள்ள அனைத்து ஊடக நிறுவனங்களும் சிங்கப்பூரின் ஊடகச் சட்டத்தை வாசித்தால் அது மிகவும் முக்கியமானது.

ஒளிபரப்பு சேவை அனுமதி வழங்குவதற்கும், அதை இரத்துச் செய்வதற்கும், தவறான தகவல்களை வழங்கினால் அதைத் திருத்துவதற்குத் தேவையான தண்டனை விதிக்கவும் அவர்களுக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனால்தான் இத்தகைய நாடுகள் உலகில் பலம் வாய்ந்த நாடுகளாக மாறிவிட்டன.

அரசியலில் ரீதியில் சிந்தித்துப் பார்த்தாலும் கூட, அரசியலில் பொய்களை பரப்பும் கலாசாரம் இலங்கையில் மாற வேண்டும். அதேநேரம், அத்தியாவசியமான உண்மைகளை மறைக்காமல் இருப்பது குறித்தும் ஊடகங்களுக்கு பொறுப்பு உள்ளது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இத்தகைய கண்காணிப்பு முறை, ஊடகங்களை வலுப்படுத்துமே தவிர ஊடகங்களைக் கட்டுப்படுத்தாது என்பதை அனைத்து ஊடகவியலாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் சரியான தகவல்களை வழங்குவது முழு நாட்டுக்கும் பயனுள்ள செயலாகும். அதனை வலுப்படுத்தும் வகையில், அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து, ஊடகங்களில் பொய்யான அறிக்கைகளை வெளியிடுவதைத் தடுப்பதற்கான பரிந்துரைகள், ஆலோசனைகள் மற்றும் வழிமுறைகளை முன்வைக்கவும் வாய்ப்பு உள்ளது.

இப்போது நமது அண்டை நாடான இந்தியா வுமைவழம சமூக ஊடகம் உட்பட 58 தொலைபேசி செயலிகளை தடை செய்துள்ளது.

எவ்வாறாயினும் பல அரசியல்வாதிகள் இந்தியாவைப் பற்றி பேசுகிறார்கள், ஜப்பானைப் பற்றி பேசுகிறார்கள், சிங்கப்பூரைப் பற்றி பேசுகிறார்கள், தென் கொரியாவைப் பற்றி பேசுகிறார்கள், சீனாவைப் பற்றி பேசுகிறார்கள்.

அவற்றை முன்னேறிய நாடுகள் என்பதற்கு உதாரணமாகக் காட்டுகின்றனர். ஆனால் வளர்ந்த நாடுகளாக உள்ள நாடுகளின் சட்ட விதிமுறைகளை யாரும் தெரிந்துகொள்ள முயல்வதில்லை. மலேசியாவைப் பற்றியும் கூறப்படுகிறது.

அந்த நாடுகள் உலகின் முன் சக்தி வாய்ந்ததாக நிற்பதற்குத் தேவையான அனைத்து அரசியலமைப்பு மற்றும் சட்ட விதிமுறைகளையும் முழுமையாகத் தயாரித்துள்ளன. எனவே, இலங்கையர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க...)

# தன் மனைவிக்கு தன் சகோதரருடன் தவறான தொடர்பாம் அதனால் இருவரையும் தாக்கினேன் என்கிறார் சந்தேகநபர்

## நாவற்குழி கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணையில் தகவல்





தனது மனைவி தவறான தொடர்பை தனது சகோதரருடன் வைத்திருந்தமையை அறிந்து ஆத்திரமுற்றதாலே இருவரையும் தாக்கினேன் என நாவற்குழியில் மனைவியைக் கொலை செய்துவிட்டு தப்பிக்க முயன்றபோது கைதான சந்தேக நபர் பொலிஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார் என அறிய வருகின்றது.

யாழ்ப்பாணம் – நாவற்குழி ஐயனார் கோயிலடியில் இளம் தாயொருவர் கொலை செய்யப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் வீட்டில் கணவனைக் காணாத நிலையில் பொலிஸாரின் சந்தேகம் வலுத்தது.

குடும்பத் தகராறில் கணவரால் இந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதிய பொலிஸார் கணவரைக் கண்டுபிடிக்கத் தீவிரத் தேடுதலை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணம்கச்சேரிக்குஅண்மையில் ஓட்டோவில் சந்தேகநபர் தப்பிக்க முற்பட்ட வேளையில் பொலிஸ் புலனாய்வாளர்களால் அவர் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார்.

தான் மனைவியைத் தாக்கினார் எனவும், ஆனால் அவர் உயிரிழந்தமை தனக்குத் தெரியாது எனவும் சந்தேக நபர் கூறினார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேலும், “மனைவி தவறான தொடர்பைத் தனது சகோதரருடன் வைத்திருந்தமையை அறிந்து ஆத்திரமுற்றதாலே இருவரையும் தாக்கினேன்” எனவும் அவர் தெரிவித்தாராம்.

இந்தச் சந்தேக நபர் ஏற்கனவே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர் என்பதுடன் வேறு சில குற்றச் செயல்களுடன் தொடர்புள்ளவராகவும் கருதப்படுகிறார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை அதிகாரியின் அறிக்கை மற்றும் சட்ட மருத்துவ அறிக்கை மேற்கொண்டதன் பின்னரே உயிரிழப்பு தொடர்பான விவரங்கள் தெரிய வரும்.

நேற்று முன்தினம் சந்தேக நபரின் தாக்குதலுக்கு இலக்காகிய சகோதரரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தமது விசாரணை நிறைவுற்றதும் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

# கீரிமலையில் கட்டப்பட்ட ஜனாதிபதி மாளிகை வளாகம் தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்குக் குத்தகைக்கா?

## கண்டிக்கின்றது அகில இலங்கை இந்து மாமன்றம்

யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகை வளாகத்தை இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு (SLIIT) நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமைக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.


அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் திருமுருகன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இக்கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

“சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கீரிமலை ஆதிச்சிவன் கோயில், சடையம்மா மடம்,உச்சிப்பிள்ளையார் கோவில் போன்றவை இடிக்கப்பட்டு அச்சுற்றாடலில் கட்டப்பட்ட அரச ஜனாதிபதி மாளிகை தற்போது பயனற்று உள்ளது.

இந்நிலையில் குறித்த ஜனாதிபதி மாளிகையை தனியார் நிறுவனங்களுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் ஜனாதிபதி மாளிகை வளாகத்தை குத்தகைக்கு வழங்கவேண்டும் என்றால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கோ அல்லது இந்து சமயம் சார்ந்த நிறுவனங்களுக்குமே வழங்க வேண்டும். அதேபோல் ஆதிசிவன் கோயில் மடங்கள் இருந்த இடத்தை உரிய தரப்பினரிடம் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதி மாளிகை மூன்று தசாப்த போரை பயன்படுத்தியே தனியார் மற்றும் கோவில் நிலங்களிலும் கட்டப்பட்டதுடன் கடந்த மூப்பது ஆண்டுகளுக்கும் மேலாக உயர்பாதுகாப்பு வலயமாக கடற்படையினரின் கண்காணிப்பின் கீழ் காணப்பட்டது.



தற்போதைய நிகழ்வுகளை திட்டமிட்ட செயற்பாடகாவே நாம் கருதுகின்றோம். இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன் தலையீடு செய்வதோடு, குறித்த பகுதியிலுள்ள நிலங்களை உரிய தரப்பினரிம் ஒப்படைக்கும் நடவடிக்கையினையும் மேற்கொள்ள வேண்டும்” – என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்ரேல் – பலஸ்தீன மோதலை நிறுத்தக் கோரி மட்டக்களப்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்



இஸ்ரேல் – பலஸ்தீன மோதலை முடிவுக்குக் கொண்டு வருமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் மட்டக்களப்பு ஊடகவியலாளர்கள் நினைவுத்தூபிக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.

அகில இலங்கை கிறிஸ்தவ காங்கிரஸ் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இஸ்ரேல் – பலஸ்தீன மோதல் காரணமாகத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இறக்கும் நிலைமையைத் தடுப்பதற்குச் சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இஸ்ரேல் – பலஸ்தீன இரு நாடுகளுக்கும் இடையில் சமாதானம் வரவேண்டும், இனம், மதம், மொழி ஒற்றுமையைச் சர்வதேச நாடுகள் உருவாக்க வேண்டும், இரு தரப்பு அப்பாவி மக்களின் உயிர்களை மதிப்போம் போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

மேலும், சர்வதேச நாடுகள் இரு நாடுகளுக்கும் ஆயுதங்கள் வழங்குவதை விடுத்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு முன்வைக்கப்பட்டது.

# இஸ்ரேல் - காசா மோதல் விவகாரத்தில் இலங்கை நடுநிலை வகிக்க வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

இஸ்ரேல் – காசா மோதலில் இலங்கை நடுநிலையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்த நிலைப்பாடு எமது இலக்குகளை அடைய உதவும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"காசா பகுதியில் மோதலில் ஈடுபட்டு வரும் எந்தவொரு தரப்பினரையும் இலங்கை ஆதரிக்கக் கூடாது.

பாதகமான விளைவுகள் எவையும் ஏற்படாதவாறு இலங்கை எடுக்கும் நிலைப்பாடுகள் அமைய வேண்டும்.

குறிப்பாக பொருளாதாரம் தொடர்பில் இலங்கை தனது சொந்த நிகழ்ச்சி நிரலில் கவனம் செலுத்த வேண்டும்." – என்றார்.



## இஸ்ரேலின் இன அழிப்புத் தாக்குதலைக் கண்டித்து

# பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக யாழில் சனிக்கிழமை போராட்டம்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு

– எஸ்.நிதர்ஷன் –

பலஸ்தீன மக்கள் மீதான இன அழிப்புத் தாக்குதலுக்கு எதிரான கண்டனத்தை வெளிப்படுத்தும் முகமாக எதிர்வரும் சனிக்கிழமை (21) காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்றுகூடுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அதன் இணைச் செயலாளர் த.ஸ்ரீபிரகாஸ் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:–

"இஸ்ரேலின் தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்பால் பலஸ்தீன மக்கள் மேற்கு கரையிலும் காஸாவிலும் சுருக்கப்பட்டுள்ளனர். இஸ்ரேல் அரசினதும் அதன் மேற்குலக கூட்டாளி நாடுகளினதும் அரசியல் பொருளாதார நலன்களுக்காக காஸா மக்கள் பலியாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக குழந்தைகளும், பெண்களும் அதிகமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தகைய மக்களுக்கு எதிரான கொடூர தாக்குதலைக் கண்டிக்கின்றோம். அத்துடன் காஸா மீதான ஆக்கிரமிப்பு யுத்தமானது தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் முடக்கப்பட்டு கொன்றழிக்கப்பட்டதற்கு ஒப்பானதாக பார்க்கப்பட வேண்டியதே. எனவே, ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு விடுதலை வேண்டி ஒருமித்து குரல் கொடுப்போம்.

இஸ்ரேலிய பயங்கரவாத ஆடசியினர் காஸா மக்களுக்கான உணவு, மருத்துவம், மின்சாரம், தண்ணீர் ஆகிய அடிப்படைத் தேவைகள் சென்றடைவதைத் தடுத்தோடு பல கட்டடங்களைத் தரைமட்டமாக்கி மக்களையும் கொன்றொழித்து வருகின்றனர். எல்லா ஒடுக்குமுறைப் போர்களிலும் குழந்தைகளின் உடலங்களே உலக மக்களின் மனச்சாட்சியை உலுக்குவதாக அமைந்து விடுவது போல் காஸா குழந்தைகள் பூக்களாகவும், பிஞ்சுகளாகவும் கருகிக்கிடப்பது தாங்க முடியாத மனவேதனையைத் தருகின்றது. இந்த அனுபவங்களைத் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் சுமந்தனர்.

உலக வல்லாதிக்க நாடுகளான அமெரிக்கா, பிரித்தானியா போன்றன இஸ்ரேலின் காஸா மக்கள் மீதான இன அழிப்புக்கு உடந்தையாக இருப்பதோடு ஏனைய நாடுகள் இந்த அழிப்பைத் தடுத்து விடக் கூடாது என்பதற்காக கடலிலும் தரையிலும் பாதுகாப்பு அரண்களாக யுத்தக் கப்பல்களையும் தமது படைகளையும் நிலைநிறுத்தியுள்ளன.

இதில் அவர்களின் அரசியல் பொருளாதார அதிகார நலன்கள் இருக்கின்றன. காஸா மக்களுக்கு எதிரான இந்தத் தாக்குதலை வேடிக்கை பார்த்து நிற்கும் அரபு நாடுகளும் ஏனைய நாடுகளும் தமது பொருளாதார நலனையும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு தமது அடிமை விசுவாசத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

உக்ரேன், ரஷ்யப் போரில் ரஷ்யாவுக்கு எதிராகக் கண்டனங்களை வெளிப்படுத்தி நின்ற ஜக்கிய நாடுகள் சபை இங்கு அனுதாபங்களை மட்டுமே வெளிப்படுத்தி தனது பக்கச்சார்பை நிரூபித்து நிற்கின்றது. பாதுகாப்பான சுதந்திரமான பலஸ்தீன நாடு அமைவதை உலகின் பெரும்பாலான நாடுகள் குறிப்பிட்டு வருவது போன்று அந்த மக்களின் இறையாண்மைக்காகவும் சுதந்திர உரிமைக்காகவும் பலஸ்தீன மக்களுக்காக ஆதரவுக் குரல் கொடுப்பதற்கு எதிர்வரும் சனிக்கிழமை 10 மணிக்கு யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக அனைத்து ஜனநாயக முற்போக்கு சக்திகளையும் ஒன்றுகூடுமாறு வேண்டுகின்றோம்." – என்றுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாத்தான் ஓதும் வேதம்..!

'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லையடி!' என்பார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போது தெரிவித்துருக்கும் கருத்து ஒன்று, இந்தப் பேச்சு மொழியைத்தான் நமக்கு நினைவுபடுத்தி நிற்கிறது.

கொழும்பில் பாலஸ்தீன தூதரகத்துக்கு நேற்று நேரில் சென்ற மஹிந்த ராஜபக்ஷ அந்நாட்டுத் தூதுவரிடம் 'போர் தீர்வு அல்ல!' என்று கூறி இருக்கின்றார்.

ஈழத் தமிழர்களின் இருப்புக்கான போராட்டத்தின் மீது, வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் கொடூர - குரூர - மிக மோசமான - போரை ஏவி விட்டு, யுத்த வெறியோடு, பேயுருக் கொண்டு, பெரும் சந்நதம் ஆடியவர் மஹிந்த ராஜபக்ஷ. ஜனாதிபதியாக அவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவும் தமிழர்களின் நீதி - நியாயத்திற்கான குரலை - இருப்புக்கான போராட்டத்தை - யுத்த வெறி அணுகு முறையில் சந்நதமாடித்தான் அடக்கி, முடிவு கண்டனர்.

அதனால்தான் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை இவ்வளவு காலம் கடந்தும், நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு அடிப்படையில் தீர்க்க முடியாத பெரும் பிணியாக - புற்றுநோய் போல - நாட்டை நிலையாகப் பீடித்து, நீடிக்கின்றது.

தாம் கடைபிடிக்க மறந்தவற்றை - அல்லது இனவெறித் திமிர்ப் போக்குக் காரணமாக பின்பற்ற மறுத்தவற்றை - இப்போது பாலஸ்தீனியர்களுக்கு ஆலோசனையாக - உபதேசமாக - மஹிந்த ராஜபக்ஷ கூற முற்படுகின்றமை விநோதமானது.

இது ஒரு வகையில் சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

பாலஸ்தீனத்தின் கூட்டொருமைப்பாட்டுக்கான இலங்கை சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. எப்போதும் பாலஸ்தீனத்தை நெருக்கமாக ஆதரித்து வருபவர்.

பாலஸ்தீனத்தை ஒரு தேசமாக 1988 இல் இலங்கை அங்கீகரித்தது.

2007 ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தில் ஒரு வீதிக்கு 'மஹிந்த ராஜபக்ஷ வீதி' - என்ற பெயர் சூட்டப்பட்டது. 2014 இல் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கை 10 லட்சம் அமெரிக்க டொலர் நிதி உதவியை சீனத்துக்கு வழங்கியிருந்தது.

பாலஸ்தீன மக்களின் இருப்புக்கான - கௌரவ வாழ்வுக்கான - தமது தேசத்தின் மீது அவர்களுக்குரிய இறைமை மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான - போராட்டத்தை சுதந்திரப் போராட்டமாகவும், விடுதலை எழுச்சியாகவும் பார்க்கும் மஹிந்த ராஜபக்ஷவும், அவரது சிங்கள தேசமும், அதேபோன்று தமது இருப்புக்காகவும், தமது தேசத்தின் இறைமை மற்றும் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் போராடும் தமிழர்களை மட்டும் 'பயங்கரவாதி'களாகவும் 'பிரிவினைவாதி'களாகவும் நோக்குவது பெரும் துரதிஷ்டமாகும். இது வரலாற்றுப் பெரும் தவறும் கூட.

# காதலியின் மிரட்டலால் காதலன் உயிர்மாய்ப்பு!

## கொழும்புத்துறையில் சோகம்

– எஸ்.நிதர்ஷன் –

காதலித்த பெண் தன்னைத் திருமணம் செய்யாவிட்டால் தற்கொலை செய்யப் போவதாககே கூறியதால் பீதியடைந்த இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கி உயிரிழந்துள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் யாழ்ப்பாணம், கொழும்புத்துறையில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் நெழுங்குளம் வீதி, கொழும்புத்துறையைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞராவார்.

காதலித்த பெண்ணுக்கு வயது குறைவு என்பதால் தந்தையார் மகனைப் பெண்ணுடன் கதைக்க வேண்டாம் என்று கூறியுள்ளார். வயது வந்ததும் திருமணம் குறித்து பேசலாம் என்று பெண் வீட்டாரிடமும் தந்தையார் தெரிவித்துள்ளார். இந்த விடயங்கள் குறித்த பெண்ணுக்குப் பிடிக்கவில்லை.

இதனால் தன்னைத் திருமணம் செய்யாவிடில் தான் தற்கொலை செய்யப்போவதாக பெண் தனது காதலனுக்குத் தொலைபேசியூடாகத் தகவல் அனுப்பியுள்ளார்.

இதனால் பீதியடைந்த இளைஞர் நேற்றுமுன்தினம் (15) மாலை தூக்கில் தொங்கி உயிர்மாய்த்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்திய சாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## அவதூறு - பழிவாங்கலைத்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற வகையில், ஊடகத்துறையை விருத்தி செய்வதற்கும் இலங்கை மக்களை உயர்மட்ட அறிவுத்துறைக்குக் கொண்டு செல்வதற்கும் தற்போது முறைமையற்ற ஊடக கலாசாரத்தை சட்டப்பூர்வமாக்குவது மிகவும் அவசியமாகும்.

மக்களே, மக்களை இழிவுபடுத்துவது, மக்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்துவது, போன்று மக்களே மக்களை அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்லப்படுவதைத் தடுப்பது, புதிய ஒளிபரப்பு அதிகார சபை சட்டமான "ஒன்லைன் முறைகளின் பாதுகாப்பு தொடர்பிலான சட்டம்" மூலம் செய்யப்படும் முக்கிய செயல்முறைகளில் ஒன்றாகும். உலக அரங்கில் இலங்கை, வலுவான இருப்பை வைத்திருப்பதற்கு இது மிகவும் முக்கியமானது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இவ்வாறு நியமிக்கப்படும் அதிகார சபையின் மூலம் தண்டனை வழங்க முடியாது. நீதவான் நீதிமன்றமோ அல்லது வேறு எந்த நீதிமன்றமோ மாத்திரமே தண்டனை வழங்க முடியும். இந்த புதிய சட்ட விதிகள் மூலம் ஆய்வு ரீதியிலான ஊடகவியலாளரும் அதேபோன்று ஆராய்ந்து பார்க்கக்கூடிய பிரஜையும் உருவாக்கப்படுவர். இது இனங்களுக்கிடையே வெறுப்பை விதைப்பதையும் நீக்குகின்றது. இந்தச் சட்டங்கள் மக்களுக்கு உண்மையை அறியும் உரிமையை உறுதிப்படுத்துகின்றன." – என்றார்.

## இளம் குடும்பப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்த பெண்ணின் கணவன் தலைமறைவாகியுள்ளார் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஹமாஸின் தாக்குதலில் இஸ்ரேலில் 41 நாடுகளைச் சேர்ந்த 105 பேர் பலி

## மேலும் 103 வெளிநாட்டவர்கள் மாயம்

கடந்த அக்டோபர் 7 அன்று, இஸ்ரேல் மீது நடைபெற்ற தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக, பாலஸ்தீனத்தை சேர்ந்த ஹமாஸ் அமைப்பினரை முற்றிலுமாக ஒழிக்க போவதாகக் கூறி பாலஸ்தீனம் முழுவதும் அவர்களைத் தேடி பழி வாங்கி வருகிறது இஸ்ரேல்.

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பினரின் போர் 10 ஆவது நாளாக நேற்றுத் தீவிரமடைந்து வரும் நிலையில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பலரும் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி, இஸ்ரேலில் ஹமாஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் 41 நாடுகளை சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர் அல்லது மாயமாகியுள்ளனர் என இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில், 105 பேர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், 103 பேர் மாயமாகியுள்ளனர் எனவும், இதனால் இது ஹமாஸுக்கும், இஸ்ரேலுக்கும் இடையேயான போர் மட்டுமல்ல, இது உலகளாவிய போர் என்றும் இஸ்ரேல் வெளியுறவுத் துறை அமைச்சகம் குறிப்பிடப்பட்டுள்ளது.




மேலும், எந்தெந்த நாட்டை சேர்ந்தவர்கள் மாயம் மற்றும் உயிரிழப்பு என்ற தகவலையும் இஸ்ரேல் வெளியிட்டுள்ளது. அதில், இந்தியா, இலங்கை, நேபாளம், சீனா, அர்ஜென்டினா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, ஜெர்மனி, அமெரிக்கா, ரஷியா, தென்னாப்பிரிக்கா, ஸ்பெயின், தாய்லாந்து, பிரிட்டன், உக்ரைன் ஆகிய நாட்டைச் சேர்ந்தவர்கள் உயிரிழந்துள்ளனர் அல்லது மாயமாகியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

# அமெ.வெளியுறவு அமைச்சர் இஸ்ரேலுக்கு நேற்று விரைவு



அமெரிக்க வெளியுறவு அமைச்சர் அன்டனி பிளிங்கன் இஸ்ரேல் சென்றடைந்துள்ளார்.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுக்கு இடையிலான மோதல்கள் தீவிரமடைவதை தடுக்கும் நோக்கில் பேச்சு நடத்தவே அமெரிக்க இராஜாங்க செயலாளர் இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில நாள்களுக்கு முன்பு கட்டார், ஜோர்டான், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்குச் சென்ற அவர் இப்போது இஸ்ரேலுக்கு வந்துள்ளார்.

தரை மற்றும் வான்வழியாக காசா பகுதியில் கடும் தாக்குதலை நடத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதன் பின்னணியில் அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்டனி பிளின்கனின் விஜயம் விசேடமானது என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காசா மீது முப்படை தாக்குதலுக்கு தயாராக இருப்பதாக இஸ்ரேல் அறிவித்துள்ள நிலையில், அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் அன்டனி பிளிங்கன் ஆலோசனை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

காசாவை இஸ்ரேல் ஆக்கிரமிப்பது தவறாக முடியும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியிருந்த நிலையில், அன்டனி பிளிங்கன், இஸ்ரேலுக்கு மீண்டும் சென்றுள்ளமை முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதற்கு முன்பு கடந்த வெள்ளிக்கிழமைதான் இஸ்ரேல் பிரதமரை அன்டனி பிளிங்கன் சந்தித்து இருந்தார்.

# ஆறு வயதுச் சிறுவனை 26 தடவைகள் கத்தியால் குத்திக் கொன்ற கொடூரம்!

## அமெரிக்காவில் குரூர வெறுப்புணர்வுச் செயல்

அமெரிக்காவில் வெறுப்புணர்வுத் தாக்குதலில் 6 வயது சிறுவன் 26 முறை கத்தியால் குத்திக் கொல்லப்பட்ட அதிர்ச்சி சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் சிகாகோ நகருக்கு மேற்கே 64 கி.மீ. தொலைவில் 32 வயதுடைய முஸ்லிம் பெண் தனது 6 வயது மகனுடன் வீட்டில் இருந்திருக்கிறார். அப்போது வீட்டு உரிமையாளரான ஜோசப் ஜூபா (வயது 71) என்பவர் வந்து கதவைத் தட்டியுள்ளார். அந்த பெண் கதவைத் திறந்ததும், ஜோசப் அவரைக் கழுத்துப் பகுதியை நெரித்து, மூச்சு திணறும்படி செய்திருக்கிறார்.

அந்த பெண் மற்றும் அவருடைய மகனை ஆயுதம் கொண்டு தாக்கியுள்ளார். இதில், இருவரின் மார்பு, உடல் மற்றும் மேல் பகுதிகளில் கத்திக் குத்து காயங்கள் ஏற்பட்டு உள்ளன. இந்த தாக்குதலில்



சிறுவன் உயிரிழந்துள்ளான். சிறுவனின் உடலில் 26 காயங்கள் உள்ளன.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே நடந்து வரும் மோதல், அவர்கள் இருவரும் முஸ்லிம் ஆகிய காரணங்களால் இந்தத் தாக்குதல் நடந்திருக்க கூடும் என பொலிஸார் அவற்றைத் தொடர்புப்படுத்திக் கூறியுள்ளனர். அந்தச் சிறுவன் பாலஸ்தீனிய அமெரிக்கன் என அமெரிக்க மற்றும் இஸ்லாமிய உறவுகளுக்கான கவுன்சில் (சி.ஏ.ஐ.ஆர்) தெரிவித்து உள்ளது.

பொலிஸார் வந்தபோது, ஜோசப் நெற்றியில்காயத்துடன்வீட்டின்வாசல்பகுதியில் தரையில் அமர்ந்த நிலையில் காணப்பட்டார். அவரைப் பொலிஸார் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவருக்கு எதிராக வெறுப்புணர்வு, கொலை, கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவாகி உள்ளது.

நீங்கள் முஸ்லிம்கள், இறக்க வேண்டும் என தாக்குதலின்போது ஜோசப் ஆவேசத்துடன் கூறியுள்ளார். இதனை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அந்த பெண் தன்னுடைய கணவருக்கு குறுஞ்செய்தி வழியே தெரிவித்து இருக்கிறார்.

இந்தப் படுகொலையை வெறுப்புணர்வின் பயங்கர செயல் என்று அமெரிக்க அதிபர் பைடன் குறிப்பிட்டு உள்ளார்.

# 27 மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்!

## வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 27 மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திங்கட்கிழமை எழுதிய கடிதம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்திய மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், இருவேறு சம்பவங்களில் 27 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 14.10.2023 அன்று IND-TN-MM-237, IND-TN-10-MM-970, IND-TN-10-MM-56 மற்றும் IND-TN-10-MM-708 ஆகிய பதிவு எண்கள் கொண்ட 4 மீன்பிடிப் படகுகளில் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 23 மீனவர்களும், மற்றொரு சம்பவத்தில் IND-TN-11-MM-726 பதிவெண் கொண்ட விசைப்படகில் மீன்பிடிக்கச் சென்ற நான்கு மீனவர்களும், எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற பெயரில் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களது மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு எழுதியிருந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததுபோல, தொடர்ச்சியாக இதுபோன்று மீனவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களது



மீன்பிடிப் படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் மீனவ மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பியுள்ள மீனவர்கள் கைது செய்யப்படுவதால், மீனவ மக்களின் வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்களால் மீனவ சமுதாயக் குடும்பத்தினருக்குப் பொருளாதார இழப்புகள் ஏற்படுவதோடு, இத்தொழிலை நம்பியுள்ள எண்ணற்ற குடும்பத்தினரின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, உடனடியாக தூதரக அளவிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க இலங்கை அரசை வலியுறுத்திட உரிய நடவடிக்கைகளை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் மேற்கொள்ள வேண்டும் என்று முதல்வர் கேட்டுக் கொண்டுள்ளார். - என்று உள்ளது.

# சென்னையில் இலங்கை தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்த காங்கிரஸ் முஸ்தீபு



(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

தமிழக மீனவர்கள் கைதைக் கண்டித்து இலங்கை தூதரகம் முன்பு விரைவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழக மீனவர்கள் விசைப்படகுகளில் பாக்ஜலசந்தி பகுதியில் மீன்பிடிக்க சென்ற போது ஞாயிறன்று 27 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களது ஐந்து படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சர்வதேச கடல் எல்லையை மீறினர் என இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், தங்கச்சிமடம், மண்டபம் ஆகிய பகுதிகளில் இருந்து மீன்பிடிக்கச் சென்றவர்கள். இந்த மீனவர்கள் ஞாயிறு மாலை 6 மணியளவில் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறையில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இச்செய்தி கடலோர மாவட்ட மீனவர்களிடையே கடும் பதற்றத்தையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே தமிழக மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லைப் பகுதியை மீறி இலங்கைக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்தனர் எனக் கூறி கைது செய்யப்படுவதும், மீனவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்கதையாக நடந்து வருகின்றது. கடற்பகுதியில் மீன்பிடிக்கச் செல்கிற தமிழக மீனவர்கள் இரவு நேரங்களில் சர்வதேச கடல் எல்லை எங்கே இருக்கிறது என்பதை சரியாக கணிக்க முடியாத காரணத்தால் தவறுதலாக எல்லையைத் தாண்டிச் செல்கின்ற நிலை ஏற்படுகிறது. இரு நாடுகளின் கடல் பகுதியில் எல்லைகளை வகுக்கலாமே தவிர, மீன்பிடிக்க செல்கிற மீனவர்களை எல்லையை தாண்டுவதாகக் காரணம் கூறி இலங்கைப் படை கைது செய்வது மனிதாபிமானமற்றது. மிக மிகக் கொடூரமானது. அதேபோல, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த நான்கு மீனவர்கள் பைபர் படகுகளில் மீன்பிடிக்க சென்றவர்கள் கடந்த ஒக்டோபர் 13 ஆம் தேதி முதல் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளார்கள். அவர்கள் திட்டமிட்டபடி சனிக்கிழமை திரும்பியிருக்க வேண்டும். ஆனால், அவர்களைப் பற்றி எந்த தகவலும் இல்லாத நிலையால், அது அவர்களது குடும்பத்தினரிடையே மிகுந்த மனஉளைச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. இதுகுறித்து அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

தமிழக மீனவர்கள் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதை தடுத்து நிறுத்துகிற வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு இதுவரை இலங்கை அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி இத்தகைய கைது நடவடிக்கைகளை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடல் தாமரை மாநாடு நடத்திய பா.ஜ.க.வினர் தமிழக மீனவர்களின் நலனை புறக்கணிக்கிற வகையில் அலட்சியப் போக்குடன் செயல்பட்டு வருவதை வன்மையாக கண்டிக்கிறேன். உடனடியாக பிரதமர் மோடி இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கேவுடன் பேச்சுவார்த்தை நடத்தி கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரையும் விடுவிப்பதோடு, பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை உடனடியாக மீனவர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். கடந்த சில ஆண்டுகளாகவே தமிழக மீனவர்கள் கடல் பகுதியில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு கடும் துன்பத்திற்கு ஆளாகி, வாழ்வாதாரம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் இலங்கை அரசின் தமிழக மீனவர்கள் விரோத போக்கை கண்டித்து தமிழ்நாடு மீனவர் காங்கிரஸ் சார்பில் சென்னையில் உள்ள இலங்கை அரசின் தூதரக அலுவலகத்தின் முன்பு விரைவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். - இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.



# ‘ஹட்ரிக்’ தோல்வியை தழுவியது இலங்கை தவிர்த்தது ஆஸி.!

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று நடைபெற்ற ஆட்டத்திலும் இலங்கை தோல்வியைத் தழுவி, தொடர் தோல்விகளால் கதிகலங்கி நிற்கின்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் இலங்கை – அவுஸ்திரேலிய அணிகள் களம் கண்டன.

இரு அணிகளும் ஏற்கனவே இரு தோல்விகளைத் தழுவி வெற்றிக் கனியை எட்ட முடியாத நிலையில் இருந்தன.

இதனால், இரு அணிகளில் ஒன்றுக்கு இந்த ஆட்டம் வெற்றிக் கனியை ருசிக்கும் போட்டியாக அமைந்தது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

அதன்படி களமிறங்கிய இலங்கையின் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பதும் நிஸங்க – குசல் பெரேரா ஜோடி, நிதான – அதிரடி ஆட்டத்தை ஆடியது.

இவர்களின் ஆட்டம் இலங்கைக்கு நம்பிக்கை அளித்தது.

எனினும், இலங்கை அணி 125 ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது இந்த ஜோடி பிரிந்தது. 21.4ஆவது ஓவரில் பதும் நிஸங்க 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் குசல் பெரேரா 78 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

பின்னர் வந்த வீரர்களுள் ஷரித் அசலங்க (25) தவிர எவரும் இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை எட்டாமலே பெவிலியன் திரும்பினர்.

இதனால், இலங்கை அணி 43.3 ஓவர்களில் 209 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது,

அவுஸ்திரேலிய அணி சார்பாக பந்து வீச்சில் கலக்கிய அடம் ஸாம்பா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



ஆஸி. வீரர் மக்ஷ்வெல்லுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் இலங்கை அணித்தலைவர் குசல் மெண்டிஸ்...

பின்னர் 210 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கிக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, நான்காவது ஓவரில் சிறு தடுமாற்றம் அடைந்தது, மதுசங்க வீசிய அந்த ஓவரில் டேவிட் வோர்னர் (11), ஸ்ரீபன் ஸ்மித் (0) ஆகியோர் வெளியேறினர்.

பின்னர் சுதாகரித்து ஆடிய அவுஸ்திரேலியா, 35.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 215 ஓட்டங்களைச் சேர்த்து, 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பாக மிச்சல் மார்ஷ் (52), மார்னஸ் (40), ஜோஷ் (58), மக்ஷ்வெல் (31–ஆட்டமிழக்காமல்), மர்கஸ் ஸ்ரோனிஸ் (20– ஆட்டமிழக்காமல்) ஆகியோர் சிறப்பாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்திருந்தனர்.

இலங்கை அணி சார்பாக பந்துவீச்சில், டில்ஷான் மதுசங்க 3 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியாவின் அடம் ஸாம்பா தெரிவானார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற தன் மூலம் அவுஸ்திரேலிய அணி, புள்ளிப்பட்டியலில் பத்தாவது இடத்திலிருந்து எட்டாவது இடத்துக்கு முன்னேறியது. தொடர் தோல்விகளால் துவழும் இலங்கை எட்டாவது இடத்திலிருந்து ஒன்பதாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.821 |
| 02 | நியூஸிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.604 |
| 03 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.360 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.652 |
| 07 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 08 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.734 |
| 09 | இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.532 |
| 10 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி







# காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழக 36 ஆவது ஆண்டு விழா கிரிக்கெட்

**(பழுவூரான்)**

மட்டக்களப்பு காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

கழகத் தலைவர் எஸ். பிரேமச்சந்திரன் தலைமையில் காந்தி ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் 9 நாட்களாக இப்போட்டிகள் நடத்தப்பட்டன. அணிக்கு ஏழு பேர் கொண்ட இந்த லீக் தொடரில், நாடு முழுவதும் இருந்து 64 கழகங்கள் பங்குபற்றின.

இதன் இறுதிப் போட்டியில் வாழைச்சேனை அன்னை வேளாங்கன்னி அணி மற்றும் நீர்கொழும்பு கற்பிற்றல் அணிகள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், நீர்கொழும்பு கற்பிற்றல் அணி வெற்றி பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவ. சந்திரகாந்தன் கலந்துகொண்டார்.

சிறப்பு அதிதியாக சண்முகலிங்கம் சுரேஷ்குமார் மற்றும் கொக்குவில் பொலிஸ்நிலையபொறுப்புதிகாரி,விளையாட்டுக் கழக வீரர்கள், பார்வையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.













# மன்னார் தென்கடலில் இறந்த நிலையில் கடல் ஆமைகள் கரை ஒதுங்குகின்றன!

(மன்னார் நிருபர்)

மன்னார் தென் கடல் பகுதியில் கடல் ஆமைகள் இறந்து கரை ஒதுங்கி வருகின்றன என அப்பிரதேச மக்கள் தெரிவித்தமையைத் தொடர்ந்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ அந்தந்த இடங்களுக்கு வருகை தந்து உயிரிழந்த ஆமைகளை மீட்டுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக மன்னார் தென்கடல் பிராந்தியத்தில் அதிகமான கடல் ஆமைகள் இறந்து கடலில் மிதந்து வருகின்றன எனவும், அத்துடன் அதிகமான ஆமைகள் இறந்த நிலையில் மன்னார் சிலாவத்துறை பகுதி கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கி வருகின்றன எனவும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அதிகாரிகள் நேற்று அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு, இறந்து கரை ஒதுங்கும் ஆமைகளை பரிசீலித்து வருகின்றனர்.

தொடர்ந்து கடந்த மூன்று தினங்களாக இறந்த ஆமைகள் கரையில் ஒதுங்கி வருகின்றமையுடன் மேலும் ஆமைகள் கடலில் மிதந்து வருகின்றன எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.





# வவுனியா வைத்தியசாலை விடுதிகளில் நோயாளருக்கு மதம் மாற்றப் போதனை

## பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு



வவுனியா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவோருக்கு அங்கு வரும் குழுவினர் மதம் மாற்ற போதனை வழங்குவதாக சிகிச்சைக்கு செல்லும் நோயாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்று வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் போது அங்கு வரும் சில குழுவினர் நோய் தீர்க்கப் போதனை வழங்குகிறார்கள் எனவும், நோயாளர்களுக்கு உதவுகிறார்கள் எனவும் கூறித் தமது மத போதனைகளை வழங்குகின்றமையுடன், மதம் சார்ந்த துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

இதனால், சிகிச்சைக்காக செல்லும் பிற மதத்தவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகுகின்றனர் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவங்கள் நோயாளர் விடுதிகளில் நடைபெறுவதால் வைத்தியசாலை நிர்வாகமும் இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனவும் சிகிச்சைக்காகச் செல்லும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருட்கள் நேற்று மீட்பு!

## தலைமன்னாரில் கடற்படைத் தேடுதலின் போது



(மன்னார் நிருபர்)

இலங்கை கடற்படையினரால் நேற்று தலைமன்னார் உறுமலை கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 04 கிலோவுக்கும் அதிகமான Crystal Methamphetamine (ICE), சுமார் ஒரு கிலோ ஹெரோயின் மற்றும் 05 கிலோவுக்கும் அதிகமான ஹாஷிஸ் ஆகிய போதைப்பொருள்கள் மீட்கப் பட்டுள்ளன.

கடற்படையினர் நேற்று அதிகாலை தலைமன்னார் கிராம பகுதி கடற்கரை பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதோடு கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றை சோதனை செய்தனர்.

இதன் போது சுமார் 04 கிலோ மற்றும் 194 கிராம் எடையுள்ள கிரிஸ்டல் மெத்தம் பெட்டமைன் நான்கு பொதிகளும், 01 கிலோ மற்றும் 034 கிராம் எடையுள்ள ஹெராயின் ஒரு பொதி, சுமார் 05 கிலோ மற்றும் 254 கிராம் எடையுள்ள ஹாஷிஸ் 5 பொதிகளும் மீட்கப்பட்டுள்ளன.





இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு 9 கோடி 40 லட்சம் ரூபா எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடற் படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மான் கொம்புகள், ரவைகளுடன் இருவர் தமண பகுதியில் கைது

(பாறுக் ஷிஹான்)

இரு மான் கொம்புகள் மற்றும் துப்பாக்கி தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் மாவட்ட பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் தமண பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மிருக வேட்டையில்சிலர்ஈடுபடுகின்றனர்எனசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என் ஜயபத்மவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று மாவட்ட பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி ஜனோசன் தலைமையிலான குழுவினர் இரு சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.





இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் வசம் இருந்து இரு மான் கொம்புகள் மற்றும் ரி 56 ரக துப்பாக்கி ரவைகள்-19, எல்.எம்.ஜி ரக தோட்டாக்கள் -03, எம்.16 ரக தோட்டாக்கள்-48 உள்ளிட்ட வெடி பொருள்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடன் தற்போது சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




# முந்தல் பிரதேச செயலக ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

(ரஸீன் ரஸ்மின்)

2024 வரவு – செலவுத் திட்டத்தில் அனைத்து ஊழியர்களின் சம்பளத்தை 20 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்க கோரி முந்தல் பிரதேச செயலக ஊழியர்கள் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் முந்தல் பிரதேச செயலகத்திற்கு முன்பாக நண்பகல் 12.00 மணி முதல் பகல் 1.00 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, "அரச ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை 20 ஆயிரத்தால் அதிகரியுங்கள்", "எரிபொருள், சமையல் எரிவாயு உள்ளிட்ட பொருள்களின் விலைகளை குறையுங்கள்", "பொருள்களுக்கு விலைகளை அதிகரிக்கும் போது அரச ஊழியர்களை கவனத்தில் கொள்ளுங்கள்" – என்பன போன்ற பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.















# அட்டாளைச்சேனையிலும் கவனவீர்ப்புப் போராட்டம்

(எம்.எவ்.நவாஸ்)

அகில இலங்கை ரீதியாக அரச உத்தியோகத்தர்கள் நேற்றுக் கவனவீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டனர்.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு முன்பாக அம்பாறை மாவட்ட தொழிற்சங்க தலைவர் கே எம். கபீர் தலைமையில் சம்பள அதிகரிப்பைக் கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எரிபொருள், எரிவாயு, நீர், மின் கட்டணம், சிறு பிள்ளைகளுக்கான பால்மா மற்றும் அத்தியவசிய பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அரச ஊழியர்களுக்கு 20 ஆயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தாத பட்சத்தில் எதிர்காலத்தில் பாரிய போராட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் தொழிற் சங்கத் தலைவர் தெரிவித்தார்.






# அரசியலில் பாலியல் லஞ்சம் கோருபவர்கள்தான் அதிகம்!

## மகளிர் கலந்துரையாடலில் தெரிவிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

அரசியலில் பாலியல் லஞ்சம் கோருபவர்களே அதிகம் காணப்படுகின்றனர் எனக் கணபதி பிள்ளையை சூரியகுமாரி தெரிவித்தார்.

அரசியலுக்கு கிராமப்புறங்களில் இருந்து வரும் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள். பெண்களை எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பது பற்றி நாங்கள் நன்கு அறிந்து உள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"பெண்களின் அரசியலுக்கான தடைகளைக் கலைந்தறிவோம்" – என்ற தொனிப்பொருளில் தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றத்தினால் வெகுஜன ஊடக ஒத்துழைப்பு செயல் திட்டம் மற்றும் ஊடக கலந்துரையாடல் திருகோணமலையில் உள்ள மல்லிகா ஹோட்டலில் இடம் பெற்றது. அது தொடர்பான ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டார்.

பெண்களை வித்தியாசமான கண்ணோட்டத்தில் அவர்கள் பார்க்கின்றனர் எனவும், பாலியல் ரீதியான துன்புறுத்தலுக்கு பெண்கள் உள்ளாகின்றார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வேறு நாடுகளில் அரசியலில் பெண்களின் விகிதாசாரம் அதிகளவில் இருப்பதாகவும் இலங்கையில் 40க்கும் மேற்பட்ட விகிதாசாரத்தில் பெண்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்காலத்தில்தேர்தலின்போதுபெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட



வேண்டும் எனவும், எப்போதும் பெண்கள் சமையலறையில் இருப்பதை மட்டும் விரும்பவில்லை எனவும் அங்கு பங்கேற்ற பெண்கள் அதிக அளவில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்வில் தேசிய ஒற்றுமைக்கான அபிவிருத்தி மன்றத்தின் பிரதிநிதி கே.சுறங்க மற்றும் பிரதேச பெண் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.10.2023




இன்று வெற்றிகரமான நாள் என்பதால் இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்களிடம் நம்பிக்கையும் உறுதியும் அதிகமாக காணப்படும்.

உங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் ஆற்றுவீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை உங்களை வெற்றியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும், உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் மனதில் இருந்து கொண்டே இருக்கும். கையில் இருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் பணிகளை சுமூகமாக மேற்கொள்வீர்கள். இன்றைய முக்கியமான நடவடிக்கைகள் நல்ல பலனைத் தரும்.

உங்கள் பணி யின் தரம் பாராட்டைப் பெறும்.உங்கள் பணிகளை உறுதியுடன் ஆற்றுவீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




ஆன்மீகத்திற்கு நேரம் ஒதுக்குங்கள். அதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம்.

உங்கள் பணிகளை ஆற்றுவதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்றுவது சிறந்தது.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. கூடுதல் செலவுகள் ஏற்படும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆனால் இன்று அது உங்களுக்கு மிகவும் கடினம்.

இன்று பணியில் அவ்வளவாக முனேற்றம் காணப்படாது. கூடுதல் பணிகளை செய்ய நேரும். பணியில் கவனம் செலுத்த வேண்டும்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது.வரவை விட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள். உங்கள் தைரியமான போக்கின் காரணமாக சிறப்பாக உணர்வீர்கள்.

பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். பயணங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் உங்களுக்கு திருப்திகரமானதாக இருக்கும். முதலீடு மற்றும் சேமிப்பதற்கான ஆற்றல் காணப்படும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச் சிகரமான நாளாக இருக்காது. உங்கள் நம்பிக்கை மற்றும் லட்சியங்களை உணர நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டியது அவசியம்.

சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படும். பணிகளை பொறுமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. வீட்டில் இருக்கும் பெரியவர்களின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

பணியில் சிறந்த பலன் பெற கவனமாக பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்காது. பணத்தைப் பொறுத்த முக்கிய முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று யதார்த்த அணுகுமுறை மற்றும் தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இது வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியாக இருப்பதன் மூலம் நல்ல பலனைக் காணலாம்.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணியிடத்தில் மாறுதல்களுக்கேற்ப பணி செய்ய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். வரவும் செலவும் சமமாக காணப்படும். நிதி சம்பந்தமான முடிவுகளை இன்று எடுப்பது உசிதமல்ல.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.10.2023




தொடர் முயற்சியின் மூலம் இன்று அனைத்திலும் வெற்றி காணலாம். நேர்மறையான எண்ணங்களை பராமரிப்பதன் மூலம் நல்ல அதிர்ஷ்டத்தைக் காணலாம்.

பணி நிமித்தமான பயணம் ஏற்படலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும். வாய்ப்பை நன்கு பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

அதிக பணவரவிற்கான வாய்ப்பு உள்ளது. ஆன்மீக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவது சிறந்த பலனை அளிக்கும்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும்.




உங்களை உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள். இன்று தேவையற்ற எண்ணங்களை தவிர்ப்பது நல்லது.

பணியில் கவனம் தேவை. பணிகள் அதிகமாக இருப்பதன் காரணமாக தவறுகள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக இன்று பண இழப்புகள் ஏற்படலாம். தேவையற்ற செலவும் இன்று ஏற்படலாம்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்படலாம்.




உங்களுக்கு பயன் தரும் வகையிலான சரியான முடிவுகளை இன்று உங்களால் எடுக்க இயலும். இன்று நன்மைகள் நடைபெறும் நாள்.

நீங்கள் உங்கள் பணிகளை ஆர்வத்துடனும் உறுதியுடனும் ஆற்றுவீர்கள். சுய முயற்சி காரணமாக நன்மை அடைவீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். நிதிகளில் முதலீடு செய்வது இன்று பலனளிக்கும்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை உணர்வுகள் உங்களுக்கு கவலையையும் குழப்பத்தையும் உருவாக்கும்.

பணியிடச் சூழல் இன்று சிறப்பாக இருக்காது. பணியில் ஏற்படும் தவறுகளால் கவலை கொள்வீர்கள். எச்சரிக்கை தேவை.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணையுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. இன்று பணத்தை சிறப்பாக கையாள முடியாத சூழ்நிலையும் உருவாகலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற்றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேரலாம்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park